*E-ISSN 2456-5148*
Online: www.ngmtamil.in

**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Tamil Consciousness of Bharati and Bharathidasan

**Dr. R. Gandhimathi***,
[1]Assistant Professor, Department of Tamil, Mazharul Uloom College (Autonomous), Ambur - 635802.
*Correspondence: rgmathi1979@gmail.com. Tel: 9952777985

**Article Info**
Received on 22-April-2026, Revised on 22-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Among the twentieth century poets, Subramania Bharati and Bharathidasan are regarded as important poets who deeply expressed Tamil consciousness in their poems. Both poets considered the Tamil language as life, mother, and sweet nectar, and revealed their intense love for Tamil through their literary works. This article examines their deep attachment towards Tamil, Tamils, and Tamil Nadu, and their desire to spread the greatness of the Tamil language throughout the world.
The study explains how Bharati and Bharathidasan praised Tamil as Tamil Mother, life-breath, delight, and social responsibility. Bharati emphasized that Tamil should spread across the world and insisted on various efforts needed for the growth of the language. Bharathidasan glorified Tamil as life, nectar, honey, mother, and light, and expressed an inseparable relationship between himself and Tamil.
Further, the article comparatively analyses the Tamil consciousness, love for Tamil, concept of Tamil Mother, sweetness of Tamil, and Tamil service reflected in the poems of both poets. The study concludes that both poets valued Tamil above their own lives and dedicated their entire lives and activities to the growth and glory of the Tamil language.

***KEYWORDS:*** *Tamil sentiment, Mother Tamil, Tamil devotion, Tamil bliss, Equal to life, Service to Tamil, Tamil language.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பாரதி பாரதிதாசனின் தமிழ் உணர்வு

[1]**முனைவர். இரா. காந்திமதி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மஜ்ஹருல் உலூம் கல்லூரி (தன்னாட்சி), ஆம்பூர்-635802.
Mobil:9952777985, Email: rgmathi1979@gmail.com

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் பாரதியும் பாரதிதாசனும் மிக முக்கியமான கவிஞர்கள் என்றால் மிகையாகாது. குறிப்பாக பாரதியின் கவிதைகள் தமிழ் புதுக்கவிதைக்கு வித்திட்டது என்றால் பாரதிதாசனின் கவிதைகள் தமிழ் உணர்வைத் தூண்டி தமிழ்க் கவிதையை வளர்த்தது. மகாகவி பாரதியாரும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் தமிழை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை அவர்களின் பாடல்களையும் அதில் விஞ்சி நிற்கும் தமிழ் உணர்வையும் வைத்து நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழ் மொழியை உயிராகவும் தாயாகவும் போற்றி அதைப் பாதுகாக்க வேண்டித் தமிழர்களைத் தயார் செய்த பெரும்பங்கு இவ்விரு கவிஞர்களையுமே சாரும். அவர்களின் தமிழ் உணர்வுக் கவிதைகளை ஆராய்வதன் மூலம் அவர்களின் தமிழ்ப்பற்றை உணர்ந்து கொள்வதோடு அதில் இருக்கும் ஒத்திசைவுகளையும் மாறுபாடுகளையும் புரிந்துகொள்ள முடியும்.

**தமிழ் உணர்வு**

தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் கருத்தாக்கங்களில் இவ்விரு கவிஞர்களுமே ஆழமான பற்று கொண்டவர்களாக விளங்கினர். என்பதை அவர்களின் பாடல்களில் காணப்பட்ட தமிழ்ப்பற்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. தமிழ் மொழியை உயிராக, தாயாக, இன்பம்தரும் தேனாக நினைத்துப் பல்வேறு பாடல்களை இயற்றியுள்ளனர். இருபெரும் கவிஞர்களும் தமிழ்ப்பற்றில் சளைத்தவர்கள் இல்லை என்றாலும் அவர்களின் கவிதைகளில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேசியக் கவியாக மகாகவியாக அறியப்படும் பாரதியின் தொழிலே கவிதையாக இருக்கிறது.

"எமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

என்று சொன்ன மகாகவி பாரதியாரின் தமிழ்த்தாய் வாழ்த்து இன்று தமிழ்நாட்டின் பட்டித் தொட்டிகளில் மட்டுமல்ல கடல் கடந்தும் ஒலிக்கின்றன. வானலைகளில் எட்டுத்திக்கும் தமிழ்மணம்

வீசி தமிழ் பரப்பி வருகின்றது. தமிழ் மொழியை வாழ்த்தும்போது தமிழ் அன்பில் ஆழ்ந்து தமிழ்தான் எல்லாம் எனும் நிலைக்கு உயர்ந்து விடுவார் பாரதியார்.

”வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!”

(பாரதியார் கவிதைகள், தமிழ் மொழி வாழ்த்து, 1-6)

உலகின் நிரந்தரமான மொழி தமிழ்மொழி. அம்மொழியில் எல்லா விதமான அறிவியல் செய்திகளும் உள்ளன என்பதை வானம் அறிந்த அனைத்தையும் அளந்த மொழி என்ற வரிகளால் குறிப்பிடுகிறார். எவ்வளவு துன்பங்கள் வந்தபோதும் அழிந்துவிடாமல் உயிர்ப்போடு இருக்கிற இளமை மொழி என்பதாக அவரின் புகழ் மொழிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. உலகம் இருக்கும் வரை மொழி இருக்க வேண்டும் என்கிற அவரது ஆர்வமும் மொழியின் மீது அவருக்கிருந்த ஆழமான அன்பும் அவரின் தமிழ்ப்பற்றை விளக்கி அவருக்கு இருந்த தமிழ் உணர்வை வெளிப்படுத்துகின்றன.

தமிழ் உணர்வு மேலிட பாரதி கட்டுரை எழுதுகிறபோது தமிழச்சியைவிட வேறு பெண்கள் அழகாய் இருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் பேசுகிறார். பாரதியின் தமிழ்பற்று உணர்வில் கலந்து உயிரில் கலந்து இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இதிலிருந்து சற்றும் குறையாத பாரதிதாசன் தம் வாழ்வே தமிழ் என்று முழங்குகிறார்.

”எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

(பாரதிதாசன் கவிதைகள், சங்கநாதம்: 1-2)

எங்கள் வாழ்வு வளத்தை மங்கவிடாமல் காக்கும் தமிழ் என்றும் புகழோடு இருக்கும் எனும் பாரதிதாசனின் இந்த முழக்கம் அவரது தமிழ் உணர்ச்சியின் வெளிப்பாடு. இது தமிழக

மேடைகளிலும், தமிழ் உணர்வு கொண்ட ஏடுகளிலும், தமிழர்களிடையேயும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓர் எழுச்சிக்குரல். இந்த உள் உணர்ச்சியை அவரது பாடல்களில் பெருமளவில் பார்க்க முடியும்.

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாய் எனில் நைந்துபோகும் என் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!"

(பாரதிதாசன் கவிதைகள், இசையமுது, தமிழ்: 5)

செம்மையான தமிழே உயிரே நறுந்தேனே என அழைத்து தன்னுடைய செயல் மூச்சு எல்லாவற்றையும் தமிழுக்காக அளித்ததாகவும் அப்படியாக தமிழ் வளர்ந்தால் அதன் வளர்ச்சி தனக்கும் வளர்ச்சி என்றும் தமிழ் வீழ்ந்தால் அது தனக்கான வீழ்ச்சி என்றும் கருதும் அளவிற்கு தமிழோடு ஒன்றர கலந்து இருக்கிறார் பாவேந்தர்.

**தமிழ்த் தாய்**

தாம் பேசும் மொழியைத் தாயாக நினைத்து பாடும் மரபு எல்லா மொழி பேசுபவர்களிடமும் உண்டு என்பதால்தான் தாய்மொழி எனும் பெயர் ஏற்பட்டுள்ளது. ஆயினும் மொழியைத் தாயாகவே கருதி உணர்வு பொங்கப் பாடப்படும் பாடல்கள் தமிழுக்கு மட்டுமே உரியதாக இருக்கின்றன. அவ்வகையில் பாரதி பாரதிதாசன் இருவருமே தமிழைத் தாயாக உயர்த்தி பாடியுள்ளனர். பாரதி குழந்தைகளுக்காகப் பாடிய பாப்பா பாட்டில் குழந்தைகளுக்குப் பலவிதமான அறிவுரைகளைக் கூறுகின்றார். தாய் நாட்டின் பெருமை, தாய்மொழியின் பெருமை ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு உரைக்கின்றார். அவ்வாறு கூறும் போது தமிழின் பெருமையினை

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!-நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!
சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!"

(பாரதியார் கவிதைகள், பாப்பா பாட்டு, 41- 47)

என்று கூறி தமிழ்த்திரு நாடு என்பது நம் தாய் அதை தொழுது வணங்கிட வேண்டும் அமிழ்தினும் இனியரான ஆன்றோர்கள் வாழ்ந்த தேசமிது. அந்த தேசத்தில் பேசப்படுகிற தமிழ் உயர்வானது அதைத் தொழுது படித்திடட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தமிழ்த்தாய் தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுவதாக தொடங்கும் பாடல் ”ஆதி சிவன் பெற்றுவிட்டான் என்னை” எனத் தமிழ்த்தாய் பேசுவதாக தொடரும். தம் பிறப்புப்பற்றி பேசி தன்னுடைய பெருமை பேசும் தமிழ்த்தாய் பிறப்புக்கு காரணமான இலக்கியங்களையும் இலக்கியங்களை உருவாக்கிய புலவர்களையும் பெருமையாகப் பேசுகிறார்.

”கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.
சாத்திரங் கள்பல தந்தார் - இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்”
(பாரதியார் கவிதைகள், தமிழ்த் தாய், 9-15)

சிறப்புமிகு புலவர்கள் பலரின் அரிய முயற்சியால் நான் இன்று வரையில் புகழோடு வாழ்ந்து வருகிறேன். என்னோடு தோன்றிய பல திசை மொழிகள் எல்லாம் இன்று அழிந்து விட்டன அதைப்போல் நானும் அழிந்து விடுவேன் என ஒருவன் சொல்கிறான் எனக்கூறி, தனக்கு நேர்ந்த கொடுமைகளைத் தன் பிள்ளைகளிடம் சொல்லி அதை சரி செய்ய வேண்டியது பிள்ளைகளாகிய தமிழர்களின் கடமை என்பதாக தமிழ்த்தாய் பேசுவதாக கவிதை படைத்துள்ளார் பாரதி.

”இந்த வசையெனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.
தந்தை அருள்வலி யாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.”
(பாரதியார் கவிதைகள், தமிழ்த் தாய், 42 - 48)

பெருமைமிகு நான் அழிந்து விடுவேன் என்று ஒருவன் கூறினான். என்னைக் கொன்றிடும் போன்ற அந்த வார்த்தையை என்னால் கேட்க முடியவில்லை. அந்த இழி நிலையை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்பதாக தன் பிள்ளைகளானத் தமிழர்களுக்கு உத்தரவிடுகிறார் பாரதியின் தமிழ்தாய். வெறுமெனப் புகழ் பேசுவதால் மட்டும் ஒன்றும் நடந்து விடாது செயல்பாடு வேண்டும் என்பதாகப் பலவற்றைப் பட்டியலிடுகிறார். பாரதியைப் போன்றே அவரின் தாசனான பாவேந்தரும் தமிழைத் தாயாக உருவகம் செய்து பாடியுள்ளார். பாரதியின் பாடல்களை விட பாரதிதாசனின் தமிழ்த்தாய் பாடல்களில் உணர்வும் அன்பும் சற்று மேலோங்கி இருக்கின்றன என்றே கூறலாம்.

தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்பதால் தமிழ்த்தாய் பாடலில் பல்வேறு கருத்துக்களைப் பாரதி கூறியிருக்கலாம். தமிழ் காப்பாற்றப்பட்டு சிறப்பாக இருப்பதால் அதை அவரின் தாசன் மகிழ்ந்து வாழ்த்தி இருக்கலாம் எனக் கொள்ள முடியும். மொழி என்பது தகவல்களைப் பரிமாறிக் கொள்கிற தொடர்பு மொழி என்பதைத் தாண்டி தமிழ் மொழியை வாழ்வை மேம்படுத்தும் ஒரு தாயாகவே உருவகம் செய்து பல்வேறு உயர்வுகளைப் பல பாடல்களில் பாராட்டுகிறார் பாவேந்தர்.

”வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே!

(பாரதிதாசன் கவிதைகள், இசையமுது-2, ‘தமிழ்)

என் வாழ்வை செம்மையாக்கும் தாய் நீ. எனக்கு பல்வேறு மாண்புகளைத் தருபவளும் நீதான். என் தமிழ் தாயே வீழ்பவர்களை வீழாது காப்பவள் நீ. வீரனின் வீரமும் வெற்றியும் நீயே எனப் புகழ்ந்திடும் பாரதிதாசன் தமிழர்களின் அத்துணை வெற்றிக்கும் அவர்களின் வீரத்திற்கும் தமிழ்த்தாய் தான் காரணம் என சிலிர்க்கிறார். அதோடு இல்லாமல் தான் தாழ்ந்துப் போகும் சூழலிலோ அல்லது தமிழ்த் தாய்க்கு தாழ்மை வரும் சூழலிலோகூட தமிழ்த்தாயை மறக்க மாட்டேன் என்கிறார். உன்னைத் தாயாக பெற்ற தமிழன் என்னாளும் தலைகுனிய மாட்டான் தலைநிமிர்ந்து தான் இருப்பான் என்று கூறுகிறார். பாவேந்தரின் இப்பாடல் புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக உள்ளது என்பதும் சிற்ப்பிற்குரியது. ஒரு படி மேலேபோய் நீ உடல் நான் உயிர் உன்னை மறக்க முடியுமா பிரிக்க முடியுமா என்று தமிழ்மீது அன்பைச் செலுத்துகிறார். அந்தத் தமிழ் அன்பு மேலும் தொடர்கிறது.

”முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்த நன் மனிதராம், புதுப்புனல் மீது

செந்தாமரைக் காடு பூத்தது போல

செழித்தஎன் தமிழே ஒளியே வாழி”

(பாரதிதாசன் கவிதைகள், இசையமுது-2, ‘தமிழ்)

இன்றைய நாட்களில் அறிவில் குறைந்து நல்ல மனிதர்களாக இருந்த தமிழர்கள் மீது புதுப்புனல் கொண்டு புதுவாழ்வு அளித்தாய். அது செந்தாமரைக் காடு பூத்தது போலே இருந்தது. அபாரமான பொலிவைத் தந்து செழித்த என் தமிழே எங்களின் ஒளியே நீ வாழ்க என்பதாக பாரதிதாசன் தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடியுள்ளார்.

**உயிருக்கு நேர்**

தாய்மொழியாகிய தமிழைத் தாயாக பாடிய பாரதியும் பாரதிதாசனும் தமிழை உயிர் எனவும் பாடியுள்ளனர். மகாகவி பாரதியார் ஒரு பிறவிக் கவிஞர். தமிழ்த் தாய் அவர் நாவில் நர்த்தனம் ஆடினாள். அதனால் தனது 12 ஆவது அகவையிலேயே கவிதை பாடி பாரதி என்ற பட்டத்தை எட்டயபுர சமஸ்தானப் புலவர்களிடம் பெற்றவர். வடமொழி “தேவபாஷை” தமிழ் மொழி “நீசபாஷை” என்று சொன்னவர்களுக்கு,

”யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவது எங்கும் காணோம்;

பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்

இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,

நாமமது தமிழரெனக் கொண்டு - இங்கு

வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்”.

(பாரதியார் கவிதைகள், தமிழ், 1-4)

பாரதியாருக்கு தமிழைவிட வடமொழி, ஆங்கிலம், இந்தி, பிரன்சு மொழிகள் நன்றாகத் தெரிந்திருந்தன. எனவே தமிழ் மொழியின் இனிமை பற்றிய அவரது தீர்ப்பு அனுபவப் பூர்வமானது. சிறப்புமிக்க உயிரினும் மேலான தமிழ் மொழியைப் பெற்றிருக்கிற நாம் பாமரராய் விலங்குகளாய் வாழ்ந்து வருவது சரியா? எனக் கேட்டு தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறார். அதோடு நில்லாமல் புலவர்களில் கம்பன் வள்ளுவன் இளங்கோவைப் பாராட்டி இது உண்மை வெறும் புகழ்ச்சிக்காக சொல்லவில்லை என உறுதிப்படுத்துகிறார். பாரதியைவிட ஒரு பங்கு மேலேபோய் தமிழை உயிர் என பேசுகிறார் பாரதிதாசன்.

“சோலையினுள் மலர்களின் தேன் அருந்தவரும் வண்டின் ஒலியையும், புல்லாங்குழல் (Flute) ஒலியையும், வீணையின் இசையையும், குழந்தைகளின் மழலைப் பேச்சினையும் கேட்டு மகிழ்ந்து, அவற்றோடு மெய்மறந்து ஒன்றி இருக்கிறேன். ஆனால் அவற்றிடமிருந்து என்னை நான் விடுவித்துக் கொள்ள இயலும். தமிழை விட்டு என்னால் பிரிய முடியாது. ஏன் என்றால், தமிழும் நானும் உடலும் உயிரும் போன்றவர்கள்”.

இதனைத்,

”தமிழும் நானும் மெய்யாய் உடல் உயிர்கண்டீர்”

(பாரதிதாசன் கவிதைகள். தமிழின் இனிமை, 3)

என்று குறிப்பிடுகிறார். மேலும், தமிழ்மொழி தமிழ் மக்களின் உயிராக இருப்பதால், உலகிலுள்ள அனைத்தையும் வெல்லும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்று பறை சாற்றுகின்றார்.

”தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக்குப் புவிமேலே”

(பாரதிதாசன் கவிதைகள். எங்கள் தமிழ், 9 - 10)

தமிழ் மொழியை உயிரோடும் உணர்வோடும் கலந்து பார்த்த பாரதிதாசன் அதை எவ்வாறு எல்லாம் அழைக்கலாம் என்று பாடியுள்ளார். வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவிற்கும் அமிழ்தம் என்று பெயர். அது மிகவும் சுவை உடையது என்றும், அதை உண்பதினால்தான், தேவர்கள் சாகா வரத்துடன் வாழ்கிறார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. பாரதிதாசனுக்கோ தமிழே அமிழ்தமாகின்றது.

”தமிழுக்கும் அமுதென்று பேர்!- அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்- இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்- இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!”

(பாரதிதாசன் கவிதைகள், இன்பத் தமிழ்)

என்தாய்த் தமிழுக்கு அமுதம் என்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேரானது எனக் குறிபிட்டு சிறப்புமிக்கத் தமிழ் எங்களின் இளமைக்குப் பால் தருவதோடு புகழ்மிக்க புலவர்க்கு வேலாகவும் விளங்குகிறது. தமிழ் எங்களின் உயர்வுக்கு வான் போன்றது. இன்பத் தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் என்பதாகத் தொடர்கிறார். தமிழ் எமக்குத் தாய், தோள், வாள், எம்மை வளப்படுத்தும் தீ எனத் தொடரும் கவிதை அவரின் தமிழ்ப் பற்றை நமக்குப் பறைசாற்றுகிறது.

**தமிழ் இன்பம்**

வடலூர் இராமலிங்க வள்ளலார் 'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் பருப்பும் தேனும் கலந்த கலவையை விடச் சுவையானவன் இறைவன்' என்றார். பாரதிக்கும் அவர் தாசனுக்கும் அந்த உணர்வை, இனிமையைத் தமிழ் தந்திருக்கிறது. தமிழ் எனச் சொல்லுகிற போதே இன்பம் தரும் தேன் வந்து பாய்கிறது என்கிறார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே- எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!

(பாரதியார் கவிதைகள், தமிழ்த் தாய், 1-4)

நாட்டைக் காக்க இளஞர்களை அழைக்கும் பாரதி அதுவரைத் தாய் நாடு என்று பேசியவர்களுக்கு மத்தியில் தந்தையர் நாடு எனக் கூறி அப்படி சொல்லும் போது சக்தி பிறப்பதாகவும் சொல்கிறார். மேலும் தமிழின் சிறப்பைப் பேசும் பாரதி

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்."

(பாரதியார் கவிதைகள், தமிழ் நாடு, 14-15)

என்பதாக தமிழ் மீது கொண்ட பற்றினால் தெள்ளுற்றத் தமிழ் அமுதின் சுவைகண்டு அதன் மூலம் இங்கு அமரர்களாக இருக்கின்றனர். சிறப்புமிகு தமிழின் சிறப்பை உணர முடியாதவர்கள்மீது பாரதிக்குக் கோபம் வருகிறது அவர்களைப் "பேடிகள்" என்றும் "பேதைகள்" என்றும் ஆத்திரத்துடன் சபிக்கிறார் பாரதி.

பாரதியின் தாசனோ இன்பமும் இனிமையும் தரும் பலாச் சுளை, கரும்பு, தேன், பால், குளிர் தரும் இளநீர் எல்லவற்றையும் விட தமிழ் இனிமையானது என்கிறார். அவரின் சிந்தனையும் கற்பனையும் தமிழின் இனபத்தைக் காட்டுவதோடு அவருக்குத் தமிழ் மேல் இருந்த அளவற்றக்

காதலையும் காட்டுகிறது. பாரதிதாசன் தமிழ் மொழியைத் தேன், பால், கண், உயிர் என்று கருதிப் பாடியுள்ளார். மொழியை இவ்வாறு வருணித்துப் பாடும் மரபும் புதியது. இம்மரபுக்கு முன்னோடியாய்த் திகழ்ந்தவர் பாரதிதாசன்.

"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர் !"

(பாரதிதாசன் கவிதைகள். தமிழின்இனிமை, 1-8)

தமிழ் இன்பம் தருவதால், அது அமுதம் போன்றது என்று குறிப்பிடுகிறார். அந்த அமுதத்தை உண்ணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி இன்பம் தமிழைப் படிக்கும் போதும் கிடைக்கும்.

"இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது !"

(பாரதிதாசன் கவிதைகள், எங்கள் தமிழ், 1 - 2)

என்று இனிமையின் எல்லை எனக் கருதப்படும் அமுதத்தையே தமிழ் இன்பத்திற்கு இணையாகக் கூறுகிறார் பாரதிதாசன். தமிழுக்கு இன்னொரு பெயர் உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? என்று வினவும் பாரதிதாசன்,

"இன்பம் எனப்படுதல் - தமிழ்
இன்பம் எனத் தமிழ்நாட்டினர் எண்ணுக."

(பாரதிதாசன் கவிதைகள், தமிழ் உணவு, 36 - 37)

என்று குறிப்பிடுகிறார். எனவே, தமிழுக்கு இன்பம் என்று இன்னொரு பெயருண்டு. தமிழ் நாட்டினரே அதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

**தமிழ்த் தொண்டு**

தமிழ்மீது தீவிரப் பற்றுக்கொண்ட பாரதி தமிழ் மொழியை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என விரும்பினார். அவ்விருப்பம் கோபமாக மாறுகிறது.

"வேறு வேறு பாசைகள் கற்பாய் நீ

வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ”

(நல்லி குப்புசாமி செட்டியார்,,2006;32)

சிறப்பில்லாத வேறு வேறு மொழிகளைப் பேசுகின்றாய் உன் தாய்மொழியைப் பேச மறுக்கிறாய் எனத் திட்டுகிறார். தமிழ்மொழியின் இனிமையை அறியாமல் ஆங்கிலக் கல்வி முறையில் மோகம்கொண்டு அலைபவர்களைப் பார்த்து கோபமடையும் பாரதி

“நரிக்குணம் படைத்த இழி நெறியாளர்”

“நாயெனத் திரியும் ஒற்றர்கள்”

“வயிற்றுக்குச் சோறு தேடுவதையே பெரிதெனக்

கொண்டு தம் உயிரை விலை கூறும் பேடியர்கள்”

(நல்லி குப்புசாமி செட்டியார், 2006;32)

என்றெல்லாம் கடுமையாகச் சாடுகிறார் பாரதி. மேலும் சிறப்புமிகு தமிழைப் பெற்ற நாம் ஊமையர்களாய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் இருக்கின்றோம். தமிழைச் சேமமுற செய்ய வேண்டும் என்றால் சிலவற்றைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தும் பாரதியின் வரிகளுக்குள்ளே அவர் தமிழ் மீது கொண்டிருந்த பற்றும் உயிர் அன்பும் விளங்குகிறது.

”சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்”

(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், தமிழ், 8-10)

தமிழை உயிராக நினைக்கும் பாரதி தமிழுக்கு ஒரு தீங்கு நேரும்போது கொதிக்கிறார். அதற்கான செயல்பாடுகளை உடனே தொடங்க வேண்டும் என வலியுறுத்துகிறார். வேறு ஒரு பாடலில் தமிழ்த்தாய் பேசுவதாகப் பாடிய பாரதி, இப்போது தானே நேரடியாகத் தமிழ் தாயின் துன்பம் தீர்க்க வேண்டும் என்பதை வலிமையாக பதிவு செய்கிறார்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும். எனக் கூறிச் செய்ய வேண்டிய செயல்பாடுகளைக் குறிப்பிடுகிறார். மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதைப் போன்று தமிழின் கவிதை பெருகெடுத்து ஓட வேண்டும் என்கிறார். அப்படி செய்வதன் மூலம் தமிழர்கள் சிறப்படைய முடியும் என்று கூறி,

“வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.”

(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், தமிழ், 8-10)

தமிழர்களாகிய நாம் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகிறார் பாரதியார்.

தமிழ் மொழி உயர்ந்த நிலை அடைவதற்குத் தமிழர்கள் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் பாரதிதாசன். தமிழ்த் தொண்டு செய்வது அமுதம் பெறுவது போல் இன்பமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழென்ற உணவினைக் குவியடா யார்க்கும்
தமிழருக்கு இங்குள குறையெலாம் தீர்க்கும்
சமமாக ஆற்றடா தமிழூழியத்தைச்
சகலர்க்கும் ஆற்றடா தமிழூழியத்தை
தமிழ் என்னும் உணர்வினைச் சேரடா எங்கும்
தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்
இமையேனும் ஓயாது தமிழுக்குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக்குழைப்பாய்

(பாரதிதாசன் கவிதைகள், இசையமுது-2, ‘தமிழ்த் தொண்டு’)

என்று தமிழ் உணர்வை எல்லாரிடமும் சேர்ப்பதற்காகப் பாரதிதாசன் பாடியுள்ளார். இவ்வாறு தமிழ் உணர்வை அனைவரிடமும் சேர்த்தால் தமிழின் ஆட்சியும் தமிழரின் ஆட்சியும் உலகில் பரவும் என்று தமிழ் உணர்வை ஊட்டுவதால் ஏற்படும் பயனையும் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப்பேனோ
தமிழன் எந்நாளும் தலைகுனிவேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீ உயிர் நான் மறப்பேனோ?”

(பாரதிதாசன் கவிதைகள், இசையமுது-2, தமிழ்)

எனக் கூறி ஒவ்வொரு மனிதனும் தன் உயிரைப் பேணிப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும், மேம்பாடு அடையச் செய்வதற்கும், எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வான். அதைப்போல நம் உயிர் போன்ற தமிழைப் பாதுகாப்பதற்கும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் நாம் எல்லாவித முயற்சிகளையும் தியாகங்களையும் செய்வதற்குத் தயார் ஆக வேண்டும் என்று கூறுகிறார் பாரதிதாசன். தமிழர்கள் விழிப்புணர்ச்சி பெறவேண்டும் என விரும்பும் பாவேந்தன் தனது வீரத்தாயில்

"என் நாட்டை நான் ஆள ஏற்ற கலையுதவும்
தென்னாட்டுத் தீரர்; செழுந்தமிழர்; ஆசிரியர்"
(பாரதிதாசன் கவிதைகள், வீர்த்தாய்)

என்று சுதர்மன் மூலமாகப் பேசுகிறார் கவிஞர். இலக்கியங்களுக்கு மட்டும் விளக்கம் தருபவன் தமிழ் ஆசிரியன் இல்லை. தமிழ்நாட்டு அரசியலில் சூழ்ச்சிகளுக்கு இடங்கொடாமல், தமிழின் ஆக்கத்திற்கும், தமிழ்நாட்டின் ஆட்சிக்கும் தமிழர்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துபவரே தமிழாசிரியர் என்று வீரத்தாயில் நிலை நிறுத்தியுள்ளார்.

**முடிவுரை**

பாரதி மற்றும் பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளில் தமிழ் உணர்வு பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுகிறது. தமிழைத் தாயாகவும், உயிராகவும், இனிமை தரும் அமுதாகவும் போற்றிய இருவரும் தமிழ்மொழியின் பெருமையையும் அதன் பண்பாட்டு உயர்வையும் தமது படைப்புகளின் மூலம் நிலைநிறுத்தியுள்ளனர். பாரதி தமிழை உலகளவில் உயர்த்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதோடு, தமிழரின் விழிப்புணர்வையும் தேசிய உணர்வையும் வளர்த்தார். பாரதிதாசன் தமிழை வாழ்வியலோடு இணைத்து சமூக மாற்றத்திற்கும் மொழி வளர்ச்சிக்கும் கருவியாகக் கண்டார்.

இவ்விரு கவிஞர்களின் பாடல்களை ஒப்பீட்டுப் பார்வையில் ஆராயும் போது, தமிழ்ப்பற்று என்பது வெறும் மொழி நேசமாக இல்லாமல் இன அடையாளம், பண்பாட்டு மரபு, சமூக முன்னேற்றம் ஆகியவற்றோடும் தொடர்புடையதாக இருப்பது தெளிவாகிறது. தமிழின் இனிமை, தமிழ்த்தாய் உருவகம், தமிழ்த் தொண்டு ஆகிய கருத்துகள் இவர்களின் கவிதைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆகவே, பாரதி மற்றும் பாரதிதாசன் ஆகியோரின் படைப்புகள் தமிழுணர்வை வளர்க்கும் இலக்கியச் செல்வங்களாகவும், தமிழ் மொழியின் நிலைத்த பெருமையை எடுத்துரைக்கும் சான்றுகளாகவும் திகழ்கின்றன.

**பயன்பட்ட நூல்கள்**

[1]. பாரதியார், பாரதியார் கவிதைகள், 2000, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[2]. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், 2000, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[3]. டாக்டர் சி. பாலசுபிரமணியன், பாரதியும் பாரதிதாசனும், 1992, நறுமலர் பதிப்பகம், சென்னை.

[4]. டாக்டர். நல்லி குப்புசாமி ரெட்டி, மகாகவி பாரதி சில ஒப்பீட்டுப் பார்வைகள், 2006, ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை.

[5]. கு.வெ.பாலசுப்ரமனியன், பாரதி வாழ்கிறார், 2017, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.